# மானியங்கள்

நாங்கள் வருடம் முழுவதும் இந்திய ரூபாய் 12,000 (பனிரெண்டாயிரம் மட்டும்) வரை தனி நபர் மற்றும் நிறுவனங்களுக்கு சிறு மானிய உதவியாக செய்து வருகிறோம். இந்த இந்தியா லிப்ட்ஸ் இந்தியா திட்டம், தேசிய அளவிலான எப்.சி.ஆர்.ஏ கொள்கைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். உள்நாட்டு உதவியாளர்களிடம் திரட்டப்பட்ட நிதி உதவியோடு, நாடு முழுவதும் உள்ள துடிப்பான செயல்பாட்டாளர்களை கொண்டு எங்கள் திட்டங்களை விரிவிக்க இப்படி செய்கிறோம்.

இந்த திட்டம் மூலம் ஆரம்பித்து ஐந்து வருடங்களுக்கு மேல் ஆகாத சிறு தொண்டு நிறுவனங்களளுக்கு பணம் மற்றும் திறன் மேம்பாட்டு ஆதரவுகளை அளிக்கிறோம். மேலும் எஸ்.டி.ஜி 17ஐ ஆதரிக்கும் வகையில் இணை-நிதி உதவிகளையும் செய்கிறோம். ஆண்டு முழுவதும் விண்ணப்பங்களை ஏற்றாலும், ஜனவரி - மார்ச், மே-ஜூன், செப்டம்பர்-நவம்பர் ஆகிய காலங்களில் மட்டுமே அவைகளை மதிப்பிடுகிறோம்.

அநேக விண்ணப்பங்களை நங்கள் பெறுவதால், சிறு தவறு கூட உங்கள் விண்ணப்பத்தினை நிராகரிக்க காரணமாகி விடும். விண்ணப்பிக்கவோ அல்லது எங்களை தொடர்பு கொள்வதற்கு முன்பு இந்த பக்கத்தினை தெளிவாக படிக்கவும். தேவையற்ற கேள்விகளை தவிர்க்கவும்.

<u>விண்ணப்ப வழிகாட்டுதல்கள்</u>

1. உங்கள் நிறுவனம் இந்திய சங்கம்/அறக்கட்டளை/நிறுவன பிரிவு 25 சட்டத்தின் கீழ்பதிவு செய்யப்பட்டு, அந்த அமைப்பின் பேரில் வங்கி கணக்கும் பேன் எண்ணும் வைத்திருந்தால் போதுமானது

2. உங்கள் ஆண்டறிக்கை உங்களது திட்ட செயல்பாட்டு திறனை நேர்மையுடனும், வெளிப்பாட்டுடனும் காட்ட வேண்டும்

3. நீங்கள் எளிய மக்களுக்கு உதவ தனிநபராக கூட இருக்கலாம். உங்கள் வயது 18 பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.

4. உங்கள் திட்ட வரைவு எங்கள் குழந்தைகள் அல்லது பெண்கள் நல திட்டங்களை பிரதிபலிக்க வேண்டும். மேலும் 1,2,3,4,5,8,10,16 ஆகிய எஸ்.டி.ஜி இலக்குகளை நிறைவேற்ற செயல்பட வேண்டும்.

5. உங்கள் திட்டவரைவு ஒரு ஆண்டுக்கு 50 பயனாளிகளை சென்றடைய வேண்டும்.

6. எங்களிடம் உள்ள குறைந்த பணத்தை கொண்டு ஒரு சில திட்டங்களுக்கு மட்டுமே உதவ முடியும். அதனால் 12,000க்கு மேல் நிதிவரைவு இருந்தால் அந்த திட்டம் நிராகரிக்கப்படும்.

7. அரசு சார்ந்த மற்றும் லாப நோக்குடைய நிறுவங்களுக்கு நங்கள் உதவுவதில்லை

8. உங்கள் விண்ணப்பத்தினை காரணத்தோடு நிராகரிக்க எங்களுக்கு அதிகாரம் உண்டு

9. வெளி நன்கொடையாளர்களை நம்பியே இந்த திட்டம் செயலில் உள்ளது. அதனால் உங்கள் விண்ணப்பம் ஏற்று கொள்ளப்படும் பட்சத்தில் உங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை நாங்கள் காலவரையின்றி நிறுத்தி வைக்கலாம்.

10. வெளிநாட்டு விண்ணப்பதாரர்களுக்கு நாங்கள் உதவுவதில்லை

11. பல்விண்ணப்பங்களை தவிர்க்கவும்

12. நங்கள் சிறு கடன் மற்றும் சுழற் கடன் மானியம் கொடுப்பதில்லை

13. நிர்வாக மற்றும் குறை கண்டறியும் செலவுகளை நாங்கள் ஏற்பதில்லை

<u>பரிந்துரைவுகள்</u>

1. ஊர் தலைவர்கள், அரசு நிர்வாகிகள், உள்ளூர் அதிகாரிகள், அனுபவமுள்ள தொண்டு நிறுவனங்கள், வங்கிகள், மதத்தலைவர்கள், முன்னுதவி அளித்த நிதி நிறுவனங்கள், நீதிபதிகள் ஆகியோர் உங்களையோ உங்கள் நிறுவனத்தையோ பரிந்துரைக்கலாம்

2. மேற்சொன்னவர்களிடமிருந்து 2 கடிதங்களை சமர்ப்பிக்க வேண்டும். கடிதம் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

<u>பிற ஆவணங்கள்</u>

உங்கள் விண்ணப்பத்தை நாங்கள் ஏற்ற பின்னர், கீழ்க்காணும் ஆவண நகல்களை மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்

நிறுவன விண்ணப்பதாரர்கள்

1. நிறுவன பதிவு சான்று

2. வங்கி நிதி அறிக்கை

3. ஆண்டு அறிக்கை/திட்ட செயல்பாட்டு அறிக்கை

4. பேன் அட்டை

5. நிர்வாகக்குழு விபரம்

6. ஊழியர் விபரம் (ஏதேனும் இருந்தால்)

7. புரிதல் ஒப்பந்தம்

தனிநபர் விண்ணப்பதாரர்கள்

1. ஆதார்

2. பேன்

3. வங்கி நிதி அறிக்கை

4. புரிதல் ஒப்பந்தம்

SHAPE

விண்ணப்பம் நிரப்பும் வழிமுறை

முதல் பிரிவை தனிநபர், நிறுவன விண்ணப்பர் இருவருமே நிரப்ப வேண்டும்

1. திரு/திருமதி மற்றும் உங்கள் முழு பெயர்

2. உங்கள் தனிப்பட்ட/வேலை மின்னஞ்சல் முகவரி

3. உங்கள் கைபேசி எண் (இருக்குமாயின் - வாட்ஸாப் எண்)

4. உங்கள் விண்ணப்ப பிரிவு

5. பிறந்த தேதி

6. உங்கள் வீடு/அலுவலக முகவரி

7. உங்கள் தனிப்பட்ட சமூக வலைதள இணைய முகவரி (அவசியமில்லை)

இரண்டாம் பிரிவை நீங்கள் நிறுவன விண்ணப்பதாரராய் இருந்தால் மட்டும் நிரப்பவும். தனிநபர் இந்த பிரிவை நிரப்ப தேவையில்லை

8. உங்கள் நிறுவனத்தின் முழு பெயர் (பதிவுச்சான்றில் உள்ளவாறு)

9. உங்கள் நிறுவன பதிவெண் மற்றும் பதிவு நாள் (| - இந்த நேர்கோட்டை கொண்டு இரண்டையும் பிரிக்கவும்)

10. கடந்த நிதியாண்டில் உங்கள் நிறுவன சேவைகளை தெரிவிக்கவும்

11. உங்கள் நிறுவன தொலைபேசி, முகவரி, பதியப்பெற்ற முகவரி (கதவு எண், தெரு எண், பகுதி, மாவட்டம், அஞ்சல் எண், மாநிலம்), இணைய முகவரி, சமூக வலைதள பக்க முகவரி (இருக்குமாயின்) மற்றும் உங்கள் சராசரி ஆண்டு வருமானம். உங்கள் நிறுவன வயது ஒரு ஆண்டுக்கு கீழ் இருக்குமாயின், இன்றைய தேதி வரையில் உங்கள் வருமானத்தை குறிப்பிடவும்.

மூன்றாம் பிரிவு உங்கள் திட்டத்தை நங்கள் ஏற்க உதவும். ஆகவே சுருக்கமாக, நேரடியாக உங்கள் திட்டத்தை விவரிக்கவும். பழமொழி, மேற்கோள், மற்றும் தேவையற்ற வரிகளை தவிர்க்கவும். ஐ.நா சபையின் ஆர்.பி.எம்.எஸ் வழிமுறையை நன்றாக புரிந்து கொண்டு இந்த பகுதியை நிரப்பவும்

12. உங்கள் திட்டத்தின் பெயர் (விளக்கமான ஆங்கில பெயர்)

13. உங்கள் மொத்த திட்ட நிதி (இந்திய ரூபாய் மதிப்பில்)

14. ஷேப் நிறுவனம் இந்த நிதியில் எவ்வளவு கொடுக்க வேண்டும்?

15. உங்கள் திட்ட பிரச்சனைகள்/தேவைகள் மற்றும் அவைகளை சந்திக்கும் உங்கள் வழிமுறைகள்

16. உங்கள் திட்ட முயற்சியின் பின்னணி தகவல் மற்றும் காரணங்கள் (தெளிவாக விவரிக்க)

17. உங்கள் திட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்கள்

18. உங்கள் பயனாளிகளின் பின்னணி, திட்ட பகுதி மற்றும் பிற விபரங்கள்

**19.** **17**ம் கேள்வியில் உள்ளவைகளை செய்ய உங்கள் தின/வார/மாத காலவரைவு

**20.** எங்கள் இலக்குகளை உங்கள் திட்டம் எப்படி பிரதிபலிக்கின்றது? இதை உறுதிப்படுத்த உங்கள் மூலோபாயம் என்ன?

**21.** உங்கள் உடனடி, குறுகிய கால, நீண்ட கால திட்ட தாக்கங்கள்

**22.** உங்கள் திட்டத்தில் உள்ள அரசியல், சமூக, பொருளாதார சிக்கல்கள் மற்றும் அவைகளை மேற்கொள்ள உங்கள் உத்தி

**23.** உங்கள் திட்ட தாக்கத்தை எப்படி அளப்பீர்கள்?

**24.** மேற்கூறிய இரண்டு பரிந்துரை கடிதங்களை பதிவேற்றவும்

**25.** இந்த திட்டத்தை நிறைவேற்ற உங்கள் பொருளாதார/நிதி/வேலை திறன்

தனிப்பட்ட நபர் - உங்கள் திட்டத்தை நங்கள் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? இந்த திட்டத்தை நிர்வாகம் செய்ய உங்கள் திறன் என்ன?

நிறுவனம் - இந்த திட்டத்தை நிறைவேற்ற உங்கள் நிறுவனத்தின் திறன்கள் யாவை?

**28.** ஷேப் நிறுவனம் லாபநோக்கற்றது, அதனால் உங்கள் விண்ணப்பங்களை இலவசமாக மதிப்பிட இயலாது. நாங்கள் வெளி மதிப்பீட்டாளருக்கு பணம் கொடுத்து உங்கள் திட்ட ஆவணத்தை மதிப்பீடு செய்கிறோம். இதற்காக உங்கள் உதவி தேவை. இதனால் அனைத்து விண்ணப்பதாரர்களும் திரும்ப பெற இயலாத தொகை ரூபாய் **220**ஐ (கட்டணம் + வரி) கட்ட வேண்டும். எங்கள் நடைமுறைகளை பற்றி மேலும் தெரிந்து கொள்ள இந்த பக்கத்தை பார்க்கவும்.